# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடமாகாணம்
## பயிற்சிப் பரீட்சை - 2016

தரம் : 05

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

## வினாத்தாள் - II

7

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் ........................................................

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக
- நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- விடைகள் எழுதப்படவேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | ஒப்பம் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்டதெனச் சான்றுப் படுத்துகின்றேன். | V/II/T/ |
| இரண்டாவது பரீட்சகர்<br>முதலாவது பரிசீலனையின் மதிப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன். | V/II/T/ |
| கணித பரீட்சகர்<br>மதிப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன் | V/II/T/EMF/ |
| பிரதம பரீட்சகர்<br>மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதெனத் தெரிவிக்கின்றேன் | V/II/T/CH/ |

**01. பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு உரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிவுசெய்து எழுதுக.**

அது அடர்த்தியான பெருங்காடு. எம்மைப் பிரிந்து சென்ற நண்பன் அக்காட்டுக்குள் இருக்கக் கூடும் எனக் கருதி அதற்குள் சென்றோம். பல்வகை விலங்குகளின் சத்தங்கள் கேட்டன. கரடிகள் உறுமின. கழுதைகள் கத்தின. நரி ஊளையிட்டது. குளத்துக்குள் இருந்த எருமைகள் எக்காளமிட்டன. மிகத் தொலைவில் காட்டுநாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. எங்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

1. தன்மைப் பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

.................................................................................................................................

2. பகைவன் என்பதன் எதிர்ச்சொல் யாது?

.................................................................................................................................

3. பந்தியில் குறிப்பிடப்படும் பிராணிகள் 3 எழுதுக.

.................................................................................................................................

4. பெருமை + காடு எனும் சொல்லைச் சேர்த்தெழுதுக.

.................................................................................................................................

5. எருமைகள் எங்கிருந்து எக்காளமிட்டன?

.................................................................................................................................

6. விசிறியும், மடக்கேறும் இடம்பெறும் சொல் எது?

.................................................................................................................................

7. அஃறிணை ஒருமை வினைச்சொல் ஒன்று எழுதுக.

................................................................................................ (7 x 1 = 7 புள்ளி)

**02. பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்தினை எழுதுக.**

1. நாக்குப் புரளுதல் : ..................................................
2. வாட்ட சாட்டம் : ..................................................
3. கண் மூடுதல் : .................................................. (3 x 1 = 3 புள்ளி)

**03. பின்வரும் விடுகதைகளுக்குரிய விடைகளை எழுதுக.**

1. அள்ள அள்ளப் பெரிதாகும். அது என்ன? ..........................................
2. தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பான். அவன் யார்? ..........................................
3. சுண்டி விட்டால் இரத்தம் வராது. வெற்றி, தோல்வி வரும். அது என்ன? ..........................................

(3 x 1 = 3 புள்ளி)

சுட்டெண் :.................

**04. சரியான சொல்லைத் தெரிவுசெய்து கீறிட்ட இடத்தை நிரப்புக.**

1. அம்மா திருமணத்திற்கு ............................................................ சேலை வாங்கினார். (கூரைச், கூறைச்)
2. தம்பி மாடிப்படியில் இருந்து ........................................................................ வந்தான். (இறங்கி, இரங்கி)

(1 x 2 = 2 புள்ளிகள்)

**05. பின்வரும் பாடலில் விடுபட்ட பகுதியைப் பூர்த்தி செய்க.**

நூலகம் என்பது தேன்கூடு
நூல் ஒவ்வொன்றும் தேன்துளிகள்!

...........................................................................

நூறாயிரமாம் நன்மலர்கள்! (2 புள்ளிகள்)

**06. வேறுபட்ட சொல்லைத் தெரிவுசெய்து கோடிடுக.**

1. இன்னல், இன்பம், உவகை
2. வனம், ஆகாயம், காடு (1 x 2 = 2 புள்ளிகள்)

**07. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

1. பாபுவும் / ஒரே / கிராமத்தில் / பிரபுவும் / வாழ்ந்தவர்கள்

   ..........................................................................................................................................................................

2. ஆண்டு / தசரத மன்னன் / நாட்டை / வந்தான் / கோசல

   ..........................................................................................................................................................................

(2 x 2 = 4 புள்ளிகள்)

08. ‘‘எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்..........’’

இப் பாடலைப் பாடியவர் யார்? ....................................................................... ( 1 புள்ளிகள்)

**09. பின்வரும் வாக்கியங்களைத் திருத்தி எழுத்து வடிவில் எழுதுக.**

1. இண்டைக்குத் திருவிழா. ..........................................................................................................................................
2. கனக்க ஆக்கள் வருவினம். ......................................................................................................................................

(2 x 2 = 4 புள்ளிகள்)

**10. பின்வரும் சிங்களச் சொற்களின் தமிழ் கருத்தை எழுதுக.**

1. றோஹல : ..................................................................
2. பரி (G) கண(க்) க காமரய : .................................................................. (2 x 1 = 2 புள்ளிகள்)

**11. பின்வரும் சிங்கள வசனத்தின் தமிழ் கருத்தை தமிழில் எழுதுக.**

*1.* அ (ம்) (B) ப ரஸய் : ............................................................................ (1 புள்ளிகள்)

**12. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

*1.* Toilet : ...................................................................

*2.* Chalk : ................................................................... (2 x 1 = 2 புள்ளிகள்)

**13. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

*1.* God bless you : ......................................................... (1 புள்ளி)

*14.* இன்று நவீன உலகில் நாம் தகவல்களை அறிந்து கொள்வதில் முக்கிய இடம் வகிப்பது தொலைக்காட்சி ஆகும். "தொலைக்காட்சியின் பயன்கள்" என்னும் தலைப்பில் எழுவாய், பயனிலை திருத்தமாக அமையக்கூடியவாறு ஐந்து சொற்களுக்குக் குறையாத *3* வாக்கியம் எழுதுக.

*1.* ..............................................................................................................................

..............................................................................................................................

*2.* ..............................................................................................................................

..............................................................................................................................


3. ..............................................................................................................................

..............................................................................................................................

(3 x 2 = 6 புள்ளிகள்)

**15. பின்வரும் எண்குறியின் பெயரை எழுத்தில் எழுதுக.**

*1. 30 049* ..............................................................................................................


*2.* 

i. உருவில் உள்ள பூக்களின் எண்ணிக்கையை உரோமன் எண்குறியில் எழுதுக.

...............................................................................................

ii. பன்னிரண்டினை உரோமன் எண்குறியில் அமைக்கத் தேவையான தீக்குச்சிகளின் எண்ணிக்கை?

..............................................................................................................................

3. 

I. தரப்பட்டுள்ள உருவில் $\frac{1}{4}$ ஐ நிழற்றிக் காட்டுக.

ii. நிழற்றாமல் எஞ்சியுள்ள பகுதியை தசம எண்ணில் தருக.

.....................................................

*4. 2, 4, 6, 8* என்னும் எண்களைச் சரியாகப் பயன்படுத்தி வெற்றிடங்களை நிரப்புக. (ஒரே எண்ணைப் பல தடவை பயன்படுத்தலாம்)


*1.* 4 + ................ + ............... = 18

5. பின்வரும் எண்ணிற்கு முன்னால், பின்னால் வரும் எண்களை வெற்றிடத்தில் எழுதுக.

..........................., 40 000, ..........................

6. தருண் 5m 45cm நீளமுள்ள நாடாவும், விஸ்ணு 8m, 97cm நீளமுள்ள நாடாவும் வைத்திருந்தனர். இருவரிடமும் உள்ள நாடாக்களின் மொத்த நீளம் யாது?

............................................................................

7. 

I. உருவிலுள்ள திண்ம உருவின் பெயர் யாது? ..............................................................


ii. இத்திண்ம உருவிலுள்ள ஓரங்களின் எண்ணிக்கை யாது? .............................................................

8. மு.ப 7.10 இற்குப் பாடசாலைக்கு வந்த சாளினி பிற்பகல் 2.05 வரைக்கும் பாடசாலையில் தங்கியிருந்து வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றாள். சாளினி பாடசாலையில் எவ்வளவு நேரம் தங்கியிருந்தாள்?

.........................................................................................................................................................

9. இரண்டு பூசணிக்காய்களின் மொத்தநிறை 14kg 700g ஆகும். ஒன்றின் நிறை 6kg 900g ஆகும். எனின் மற்றைய பூசணிக்காயின் நிறையைக் காண்க.

.........................................................................................................................................................

10. 


இரண்டு பென்சில்களினதும் மொத்த நீளம் யாது? ...........................................................................


11. 


கடிகார முகம் காட்டும் நேரம் பிற்பகல் நேரமாகும். இதனை நியம நேரத்தில் தருக.

..........................................................................


12. பழங்கள் 8 வீதம் உள்ள 3 பெட்டிகளும் பழங்கள் 6 வீதம் உள்ள 5 பெட்டிகளும் உள்ளன. 8 பெட்டிகளிலும் உள்ள மொத்தப் பழங்கள் எத்தனை?

...................................................................................

13. 


பாத்திரம் A யை நிரப்புவதற்கு பாத்திரம் B இனால் எத்தனை தடவைகள் நீர் ஊற்ற வேண்டும்?


..........................................................................

14. 


இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.

..........................................................................


15. உருவில் உள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையிலுள்ள வெற்றிடத்தை நிரப்புக.




| இருந்து | வரைக்கும் | தூரம் |
|---|---|---|
| கொழும்பு | மஹாவெவ | 60km |
| நீர்கொழும்பு | மஹாவெவ | 25km |
| நீர்கொழும்பு | சிலாபம் | 41km |
| கொழும்பு | சிலாபம் | ........................ |

(15 x 2 = 30 புள்ளிகள்)

16.1. விதையொன்று முளைத்து வளரும் முறை தொடர்பான சரியான ஒழுங்கைக் கொண்ட விடை எது?




1. BDCA  2. BCAD  3. BCDA  4. ACAD

2. காயாக இருக்கும்போதும் காய்ந்த பின்னரும் பச்சை நிறமாக இருக்கும் வித்து

1. கௌபி  2. கடலை  3. கச்சான்  4. பயறு

3. பின்வருவனவற்றுள் மூன்று இதழ்களைக் கொண்ட பூக்களின் தொகுதி

1. தென்னை, போகன்விலா  2. நித்தியகல்யாணி, செவ்வரத்தை
3. எக்சோறா, மல்லிகை  4. சூரியகாந்தி, போகன்விலா

4. பயிர்களைச் சேதப்படுத்தும் நத்தைகளைப் பிடித்து உண்ணும் பிராணி

1. காட்டுக்கோழி  2. குந்துகாலி  3. மரநாய்  4. செண்பகம்

5. தையல் வேலையின் போது ஊசி குத்தாதிருக்கப் பயன்படுத்தப்படும் உபகரணம்.

1. கையுறை  2. தீதாள்  3. சுவடு வரை சில்லு  4. பெரிய ஊசி

6. நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாக்கும் உணவுகளாக இருப்பவை.


1. வல்லாரை, பொன்னாங்கண்ணி  2. அவரை, கடலை
3. உருளைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு  4. இறைச்சி, முட்டை

7. ''மணியாசு'' எனும் கருவியைப் பயன்படுத்தும் தொழிலாளர்


1. பொற்கொல்லர்  2. கொத்தன்  3. தச்சன்  4. உழவன்

8. பின்வரும் மின் இணைப்புத் தொகுதிகளில் மின்குமிழ் ஒளிரக்கூடிய இணைப்பு எது?

1.  2.  3.  4.







9. தரப்பட்டுள்ள படம் குறித்து நிற்பது



1. புகையிரதக் கடவை
2. பாதுகாப்புடைய புகையிரதக் கடவை
3. பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை
4. புகையிரத நிலையம்

10. சரியான கொண்ணிலை கொண்ட பாதச் சுவடுகள்

1. 
2. 
3. 
4. 

11. கடதாசி ஒன்றை மடித்துச் செய்யும் ஆக்கம்

1. கொலாஜ் 2. அல்பானா 3. ஓரிகாமி 4. கிறுக்கல் சித்திரம்

12. வேலை ஒன்றைக் கூட்டாகச் செய்வதால் கிடைக்கும் நன்மை அல்லாதது.


1. வேலையை இலகுவாகச் செய்யலாம் 2. நீண்ட நேரம் எடுக்கும்
3. மகிழ்ச்சியாக வேலை செய்ய முடியும். 4. ஒற்றுமை உணர்வு அதிகரிக்கும்.

13. காந்தம் ஒன்றினால் கவரக்கூடிய பொருட்களின் தொகுதியாக இருப்பது.

1. குண்டூசி, இரும்பு ஆணி 2. இரும்பாணி, றபர்பான்ட்
3. சில்வர் கோப்பை, அலுமினியக் கோப்பை 4. பிளாஸ்ரிக் கரண்டி, தக்கை

14. இலங்கையின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்களுள் ஆங்கிலேயர்களால் "தேசத்துரோகி" என பிரகடனப்படுத்தப்பட்டவர் யார்?

1. சேர்.பொன்.இராமநாதன் 2. கொங்காலேகொட பண்டா
3. கெப்பட்டிப்பொல திசாவை 4. சித்திலெப்பை

15. 

இவ்வுரு எதனைக் காட்டுகின்றது?

1. கவனமாகக் கையாளவும் 2. உடையக் கூடியது
3. பாரமானது 4. இப்பக்கம் மேலே

16. இலங்கையின் தேசிய மலர்

1. தாமரை 2. அலரி 3. செவ்வந்தி 4. அல்லி

17. தேசப்படத்தில் புகையிரதப் பாதையைக் குறித்துக்காட்டப் பயன்படும் நிறம்.

1. சிவப்பு 2. கறுப்பு 3. நீலம் 4. மஞ்சள்

18. அரச இலச்சினையில் மலர் இதழ் குறித்து நிற்கும் பொருள்

1. தர்மம் 2. தூய்மை 3. உலக நிலைப்பாடு 4. சௌபாக்கியம்

19. தென்மாகாணக் கடலில் கலக்கும் நதி.

1. வழுக்கியாறு 2. தெதுறுஓயா 3. ஜின் கங்கை 4. மகாவலி கங்கை

20. குருநாகல் மாவட்டம் அமைந்துள்ள மாகாணம்

1. வடமாகாணம் 2. வடமேல் மாகாணம் 3. தென்மாகாணம் 4. வடமத்திய மாகாணம்

21. அவுஸ்ரேலியாவின் தேசிய சின்னம்

1. காட்டுக்கோழி 2. பண்டா 3. கழுகு 4. கங்காரு

22. இந்தியாவிற்கு தெற்கில் அமைந்துள்ள நாடு?


1. தாய்லாந்து 2. இலங்கை 3. சீனா 4. ஜப்பான்

23. உணவாகப் பயன்படும் வித்து அல்லாதது.

1. பப்பாசி 2. சோளம் 3. நெல் 4. பாசிப்பயறு

24. உலகிலுள்ள மொத்த நீர்ப்பரப்பில் நன்னீராகக் காணப்படும் நீரின் சதவீதம் யாது?

1. 97% 2. 2% 3. 1% 4. 3%

25. 


இப்படம் குறித்து நிற்பது

1. நீர்வடிகட்டி 2. மழைமானி


3. மண்ணின் பகுதிகள் 4. புனலும் நீரும்

26. புதுவருடத்தில் கிணற்றுடன் கொடுக்கல் வாங்கல் செய்து கொள்ளும் சம்பிரதாய நடைமுறையைக் கொண்டவர்கள்.

1. தமிழர் 2. சிங்களவர் 3. முஸ்லீம்கள் 4. வேடுவர்

27. சூழலில் உள்ள அழுக்குகளை சுத்தப்படுத்தும் பிராணி

1. கிளி 2. மைனா 3. காகம் 4. செண்பகம்

28. 

இவ்வுருவில் உள்ள உபகரணத்தைப் பயன்படுத்துவதன் மூலம்

1. காற்று வீசும் திசையை அறியலாம்

2. காற்றின் கதியை அறியலாம்

3. வானிலை பற்றி முன்கூட்டியே அறியலாம்

4. விமானத்தின் தரை இறக்கத்தை அறியலாம்.

29. 

உருவில் உள்ளவர்

1. கலாயோகி ஆனந்தகுமாரசாமி

2. சேர் டீ.பி.ஜயதிலக்க

3. கலாநிதி ரீ.பீ. ஜாயா

4. அநகாரிக தர்மபாலா

30. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு மிக உகந்த உணவு


1. பாண் 2. மரவள்ளி 3. நூடில்ஸ் 4. குரக்கன்

(30 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
# பயிற்சிப் பரீட்சை 07 இன் விடைகள்

**தரம் – 05** **7** **வினாத்தாள் – II**

01. 1. சென்றோம். 2. நண்பன் 3. கரடிகள், கழுதைகள், நரி, எருமைகள், காட்டு நாய்கள்
4. பெருங்காடு 5. குளத்துக்குள் 6. பிரிந்து
7. ஊளையிட்டது / கேட்டுக் கொண்டிருந்தது. (7 x 1 = 7 புள்ளிகள்)

02. 1. சொன்ன சொல் தவறுதல் 2. தோற்றப்பொலிவு 3. இறத்தல் / சாதல் (3 புள்ளிகள்)
03. 1. பள்ளம் 2. இளநீர் 3. நாணயம் (3 புள்ளிகள்)
04. 1. கூறை 2. இறங்கி (2 புள்ளிகள்)
05. நூலகம் என்பது பூங்காடு (2 புள்ளிகள்)
06. 1. இன்னல் 2. ஆகாயம் (2 புள்ளிகள்)
07. 1. பிரபும் பாபுவும் ஒரே கிராமத்தில் வாழ்ந்தவர்கள்
2. தசரத மன்னன் கோசல நாட்டை ஆண்டு வந்தான். (4 புள்ளிகள்)
08. சுப்பிரமணிய பாரதியார் (1 புள்ளி)
09. 1. இன்று திருவிழா / இன்றைக்கு திருவிழா 2. அதிக ஆட்கள் வருவார்கள் (4 புள்ளிகள்)
10. 1. வைத்தியசாலை 2. கணனி அறை (2 புள்ளிகள்)
11. மாம்பழம் ருசியானது (1 புள்ளி)
12. 1. மலசலகூடம் 2. வெண்கட்டி (2 புள்ளிகள்)
13. இறைவன் உங்களை ஆசிர்வதிப்பார் (1 புள்ளி)
14. பொருத்தமான வாக்கியங்கள் (6 புள்ளிகள்)
15. 1. முப்பதாயிரத்து நாற்பத்தொன்பது
2. I. VI II. நான்கு
3. I.  (ஏதாவது இரு கட்டங்கள்) II 0.75
4. 6/8
5. 39999, 40001
6. 14m 42cm
7. 1. நான்முகி 2. ஆறு
8. 6 மணித்தியாலயம் 55 நிமிடம்
9. 7kg 800g
10. 9 cm
11. 14 : 30 மணித்தியாலம் / 14 : 30h
12. 54 பழங்கள்
13. 10 தடவை
14. 24cm 8mm
15. 76km (30 புள்ளிகள்)

16.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 2 | 11. | 3 | 21. | 4 |
| 2. | 4 | 12. | 2 | 22. | 2 |
| 3. | 1 | 13. | 1 | 23. | 1 |
| 4. | 4 | 14. | 2 | 24. | 3 |
| 5. | 2 | 15. | 1 | 25. | 2 |
| 6. | 1 | 16. | 4 | 26. | 2 |
| 7. | 2 | 17. | 2 | 27. | 3 |
| 8. | 2 | 18. | 2 | 28. | 2 |
| 9. | 2 | 19. | 3 | 29. | 2 |
| 10. | 2 | 20. | 2 | 30. | 4 |

(30 புள்ளிகள்)